4. அறிக்கை அளித்தல்.

சட்ட விதிகள் ஆய்வுக் குழு.

மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: (பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் 6-வது அறிக்கையை (எட்டாவது சட்டமன்றப் பேரவை) பேரவைக்கு அளிக்கிறேன்.

5. அரசினர் சட்ட முன்வடிவு.

தொழுநோயாளிகள் (தமிழ்நாடு நீத்தறவு) சட்ட முன்வடிவு, 1987.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"1987-ஆம் ஆண்டு தொழுநோயாளிகள் (தமிழ்நாடு நீத்தறவு) சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: இச் சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

6. வரவு-செலவுத் திட்டம், 1987-88, வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

(அ) கோரிக்கை எண் 15—காவல் துறை—தொடர்ச்சி.

(ஆ) கோரிக்கை எண் 16—தீயணைப்புப் பணிகள்—தொடர்ச்சி.

*திரு. கு. ரமணி: மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் அவர்களே, இந்த போலீஸ் மானியத்தின் மீது இரண்டு நாள் விவாதம் நேற்றிலிருந்து ஆரம்பிக்கப்பட்டு இந்தச் சபையின் மாண்புமிகு உறுப்பினர் பல விஷயங்களை இந்த அவை முன்னர் எடுத்து வைத்திருக்கிறார்கள். மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட்